**பண்டாரவளை மாநகர சபை**

**பதுளை மாவட்டம்**

-----------------------------------------------

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2014 மார்ச் 24 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2013 மார்ச் 19 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை சபையின் தலைவருக்கு 2014 ஆகஸ்ட் 26 ஆந் திகதியன்று வழங்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிசார் கூற்றுக்களில் ஏற்பட்ட தாக்கங்களைத் தவிர, நிதிசார் கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு அமைய தயாரிக்கப்பட்டிருந்தன என்றும் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பண்டாரவளை மாநகர சபையின் நடவடிக்கைகளது நிலைமை மற்றும் முடிவுற்ற அவ்வாண்டிற்கான அதன் செயற்பாட்டினது நிதிசார் விளைவுகள் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றினது உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலையைக் காட்டுகின்றன. என்பதும் எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை

மீளாய்வாண்டின் பொருட்டுச் சபை தயாரித்துச் சமர்ப்பித்த நிதிசார் கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கமையத் தயாரிக்கப்படவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியம் மற்றும் நகர்ப்புற அபிவிருத்தி அதிகாரசபை என்பவற்றிடமிருந்து பெற்ற ரூபா 6,082,198 கடனுக்கு மீளாய்வாண்டில் செலுத்த வேண்டிய வட்டியாக ரூபா 313,646 கணக்கிலிடப்படாமை காரணமாக ஆண்டிற்கான செலவினமும் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன்கொடுத்தோரும் ரூபா 313,646 குறைவாக நிதிசார் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) நகர்ப்புற அபிவிருத்தி அதிகார சபையின் பெயரில் சபையால் பேணப்படும் வங்கிக் கணக்கில் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறிருந்த மீதி ரூபா 1,656,192 ஆகும்.

எனினும், இது ரூபா 1,645,176 ஆகக் கணக்கிலிடப்பட்டமையால் நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 11,016 குறைவாக நிதிசார் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டிற்கான விடுதிகளது முகாமைத்துவக் கட்டணமாகிய ரூபா 1,287,000 ரூபா 1,782,000 ஆகக் கணக்கிலிடப்பட்டமையால் ஆண்டிற்கான வருவாய் ரூபா 495,000 கூடுதலாக நிதிசார் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு விலைப்பட்டியலைச் சமர்ப்பித்திராத 6 வேலைகளது மதிப்பிடப்பட்ட மற்றும் உடன்படிக்கைத் தொகை என்பவற்றிற்கு கடன்கொடுத்தோரின் கீழ் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதனால் கடன்கொடுத்தோர் மற்றும் ஆண்டிற்கான செலவினம் என்பன முறையே நிதிசார் கூற்றுக்களில் ஒவ்வொன்றும் ரூபா 8,773,300 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

**1.3.3 எதிர்பாராப் பொறுப்புகள்**

1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய (திருத்த) அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் வாகனக் கட்டுப்பாட்டு மேற்பார்வையாளர்களைப் பணியில் அமர்த்துவதற்கென 2003 ஜனவரி தொடக்கம் 2013 மார்ச் 31 வரையான காலத்திற்கான ஊழியர் சேமலாப நிதிய உதவுதொகைக் கொடுப்பனவாக வழங்க வேண்டிய ரூபா 2,004,080 மற்றும் தண்டப் பணமாகிய ரூபா 926,125 என்பவற்றிற்கு நிதிசார் கூற்றுக்களில் நிதியேற்பாடு மேற்கொள்ளப்படவில்லை.

**1.3.4 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்யவேண்டிய கணக்குகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பெற வேண்டிய கணக்குகளது மீதி ரூபா 104,095,428 ஆகும். அத்தினத்தில் உள்ளவாறான கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகளது மீதி ரூபா 137,386,511 ஆகும்.

**1.3.5 கணக்காய்விற்கான சான்றின்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 97,483,709 கூட்டுத் தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

**1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், என்பவற்றுடன் இணங்காமை**

கீழே குறிப்பிடப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) இலங்கை குடியரசின் தாபன விதிக் கோவையினது XXIV அத்தியாயத்தின் 1:6 மற்றும் 4 ஆம் பிரிவுகள் | சேவை நீங்கிய, ஓய்வு பெற்ற, இடமாற்றம் பெற்ற, மரணமடைந்த ஊழியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் ஜவரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 92,799 ஊழியர் கடன் அறிவிடப்படாதிருந்தது. |
| (ஆ) உள்ளுராட்சி ஆணையாளரின் 1980 டிசெம்பர் 31 ஆந் திகதிய 1980/46 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | கடை ஒன்றைக் குத்தகைக்குப் பெறும் நபர் ஒருவர் தனது விருப்பின் பேரில் குத்தகை உடன்படிக்கையை இரத்துச் செய்யுமிடத்து கடையைச் சபை பொறுப்பேற்று மீண்டும் கேள்விகளைக் கோரி அதனைக் குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். எனினும், 20 சந்தர்ப்பங்களில் சபை மீண்டும் கேள்விகளைக் கோராது ஒப்படைப்பிற்கான கட்டணத்தை மாத்திரமே பெற்று முன்னைய குத்தகையாளருக்கே அவற்றை வழங்கியிருந்தது. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம் 2013 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் வருவாயிலும் கூடிய மீண்டுவருஞ் செலவினம் ரூபா 33,540,553 ஆகும். இதற்கெதிரான முன்னைய ஆண்டின் டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிலான மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 24,922,196 ஆகும். இதற்கமைய, நிதிசார் கூற்றுக்களில் ரூபா 8,618,357 சாதகமான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு

நிதிசார் விளைவுகளின் நிகர அதிகரிப்பு தொடர்பு பகுப்பாய்வுடனான மீளாய்வு கீழே காணப்படுகின்றது.

| **மீண்டுவரும் வருவாய்** | **2013** | **2012** | **வேறுபாடு** | |
|---|---|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | |
| தீர்வையும் வரியும் | 24,330,413 | 20,113,517 | 4,218,896 | |
| குத்தகை வாடகை | 27,017,176 | 30,819,083 | (3,801,906) | |
| அனுமதிப் பத்திரம் | 8,340,985 | 4,439,112 | 3,901,873 | |
| சேவைக் கட்டணம் | 13,072,769 | 8,966,328 | 4,106,441 | |
| பிடி ஆணைக் கட்டணமும் தண்டப் பணமும் | 844,566 | 506,014 | 338,552 | |
| பிற வருவாய் | 21,086,003 | 15,719,264 | 5,366,739 | |
| வருவாய்க்கான உதவி | 59,379,831 | 42,198,429 | 17,181,402 | |
| | | | | 31,309,997 |
| **மீண்டுவருஞ் செலவினம்** | | | | |
| சம்பளமும் படியும் | 66,746,780 | 52,894,376 | (13,852,404) | |
| பயணச் செலவினம் | 2,414.188 | 685,418 | (1,728,770) | |
| வழங்கலும் சேவைகளும் | 11,168,483 | 9,294,681 | (1,873,802) | |
| மூலதனச் சொத்துப் பழுதுபார்ப்பும் பராமரிப்பும் | 9,359,082 | 6,591,085 | (2,767,997) | |
| போக்குவரத்தும் பாவனைச் சேவைகளும் | 24,033,134 | 20,608,696 | (3,424,438) | |
| வட்டி, பங்கிலாபம் மற்றும் மிகையூதியக் கொடுப்பனவு | 4 ,857,438 | 5,815,078 | 957,640 | |
| உதவிப் பணம் உதவு தொகை மற்றும் நிவாரணத் தொகை | 1,844,507 | 1,410,053 | (434,454) | |
| ஓய்வூதியம், ஓய்வூதிய நலன் மற்றும் பணிக்கொடை | 107,577 | 540,162 | 432,585 | (22.691,640) |
| சாதகமான வேறுபாடு | | | | 8,618,357 |

## 2.3 வருவாய் நிர்வாகம்

### 2.3.1 நீதிமன்றத் தண்டப் பணமும் முத்திரைக் கட்டணமும்

மாகாண சபைத் தலைமைச் செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணமும் முத்திரைக் கட்டணமும் பின்வருமாறு.

| | **ரூபா** |
|---|---|
| நீதிமன்றத் தண்டப் பணம் | 676,230 |
| முத்திரைக் கட்டணம் | 1,989,180 |
| | 2,665,410 |

### 2.3.2 கடைக்கான குத்தகை

வர்த்தக நிலையத்தில் அமைந்துள்ள சபைக்குச் சொந்தமான கடைகளிலிருந்து பெறப்படும் வருவாயானது அவற்றின் பராமரிப்புச் செலவினத்திற்கும் வர்த்தக நிலையக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு உள்ளூர்க் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்திடமிருந்து பெற்ற தொகைக்கான வட்டியைச் செலுத்துவதற்கேனும் போதுமானதாக அமையாததால், சபை நிதி இழப்பிற்குள்ளாகியிருந்தது. உள்ளூராட்சி ஆணையாளரின் 1980 டிசெம்பர் 31 ஆந் திகதிய 1980/46 ஆம் இலக்கச் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கடை வாடகையை மதிப்பீடு செய்து அதற்கேற்றவாறு வாடகையை அறவிடுவதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

### 2.3.3 விளம்பரப் பலகைக் கட்டணம்

சபையின் எல்லைக்குள் நிறுவப்பட்டுள்ள நிலையான விளம்பரப் பலகைகள் தொடர்பான கணிப்பு மேற்கொள்ளப்படவில்லை.

## 2.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

உள்ளூராட்சி ஆணையாளரின் 1980 டிசெம்பர் 31 ஆந் திகதிய 1980/46 ஆம் இலக்கச் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக, புதிய பஸ் தரிப்பிடத்தை நிர்மாணித்ததன் பின்னர் கடைகளை வழங்கும் அடிப்படையில் 15 கடை உரிமையாளர்களிடமிருந்து முற்பணமாக ரூபா 4,200,000 பெறப்பட்டு வைப்புக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

## 2.5 பயனற்ற சொத்துக்கள்

சபைக்குச் சொந்தமான ரூபா 2,860,266 பெறுமதியான 3 சொத்துக்களைப் பழுதுபார்த்துப் பயன்படுத்துவதற்கோ அல்லது அவற்றைக் கைதவிர்ப்புச் செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்படாது அவை பயனற்றவாறிருந்தன.

## 2.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பண்டாரவளை மத்திய நகர செயற்திட்டம் ரூபா 9,482,310 உடன்படிக்கையில் ஆரம்பமாகியபோதும் 2014 ஆம் ஆண்டில் கைவிடப்பட்டதால் செயற்திட்டத்தின் மீதான ரூபா 3,458,292 செலவினம் விரயமாயிற்று.

# 3. கணக்களி தகைமையும் நல்லாளுகையும்

## 3.1 வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு

மாநகர சபையின் வரவு, செலவுத் திட்டமிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருவாய், செலவினம் என்பவற்றுக்கிடையே பின்வரும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| மீண்டுவரும் வருவாய் | வரவு, செலவுத் திட்டமிடப்பட்டது | உள்ளவாறானது | வேறுபாடு | வேறுபாட்டின் சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 5,202,100 | 8.340,985 | 3,138,885 | 60.03 |
| சேவைக் கட்டணம் | 7,008,000 | 13,072,769 | 6,064,769 | 86.5 |
| பிடிஆணைக் கட்டணமும் தண்டப்பணமும் | 352,400 | 844,566 | 492,166 | 139.7 |
| பிற வருவாய் | 6,950,400 | 21,086,002 | 14,135,602 | 203.4 |
| வருவாய்க்கான உதவி | 42,497,150 | 59,379,831 | 16,882,681 | 39.7 |
| **மீண்டுவருஞ் செலவினம்** | | | | |
| ஆளுக்குரிய வேதனம் | 60,329,120 | 66,746,780 | 6,417,660 | 10.6 |
| பயணச் செலவினம் | 1,034,000 | 2,414,188 | 1,380,188 | 133.5 |
| மூலதனச் சொத்துப் பழுதுபார்த்தலும் பராமரிப்பும் | 11,440,000 | 9,359,083 | 2,080,917 | 18.2 |
| போக்குவரத்தும் பாவனைச் சேவைகளும் | 20,839,800 | 24,033,134 | 3,139.334 | 15.0 |
| உதவிப்பணம், உதவுதொகை, நிவாரணத் தொகை | 2,280,850 | 1,844,507 | 436,343 | 19.1 |
| ஓய்வூதியம், ஓய்வூதிய நலன், பணிக்கொடை | 325,000 | 107,577 | 217,423 | 66.9 |

## 4 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) களஞ்சியக் கட்டுப்பாடு